**கவனிக்க.-** *2010.12.31 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1688 - 2011 ජනවාරි මස 07 වැනි සිකුරාදා - 2011.01.07

*1688 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) – பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 2 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 2 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, சனவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மற்றைய நியமனங்களும் பிறவும்

*2011 இன் இல. 1*

**இலங்கைத் தொண்டர் வான்படை**

வான்படை தளபதியால் அனுமதிக்கப்பட்ட பதவியுயர்வு

*2010,* திசெம்பர் மாதம் *23* ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பிளைட் லெப்டினன்ட்:-

ப்ளையிங் ஒபிசர் சுபோத தவுலகல அங்கம்மன (வீ/0497) - விநியோகம்
ப்ளையிங் ஒபிசர் நுவன் சாமர சேனாநாயக (வீ/0505) - விநியோகம்

*2009,* யூலை மாதம் *14* ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ப்லையிங் ஒபிசர்
பைலட் ஒபிசர் துவான் சமீர் செய்னோ (வீ/0510) - பரிபாலன கல்வி

டபிள்யூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயார் சீப் மாஷல்,
வான்படைத் தளபதி

கொழும்பு,
*2010.*

*1-59*

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

*1990* ஆம் ஆண்டின் *4* ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் *8* ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''எல்லோரும் மாஸ்பொத்தவைச் சேர்ந்த விஜேசுந்தர முதியான்சலாகே விமலவீர, விஜேசுந்தர முதியான்சலாகே ஆனந்த காமினி பண்டார மற்றும் அத்தபத்து முதியான்சலாகே அநுர விஜேசுந்தர என்போர், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எவ். ஜே. சீ. டபிள்யூ. பெரேரா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட *2008.08.14* ஆந் திகதிய *1794* ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும், *2009,* நவெம்பர் *30* ஆந் திகதியன்றுள்ளவாறாக பதினொரு இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. *11,83,346.46*) கொண்ட தொகையும் *2009,* திசெம்பர் *1* ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை எட்டு இலட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று ஐம்பத்து நான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. *8,10,754.57*) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (*29%*) வட்டியும் சொல்லப்பட்ட முறி மீது சொல்லப்பட்ட விஜேசுந்தர முதியான்சலாகே விமலவீர, விஜேசுந்தர முதியான்சலாகே ஆனந்த காமினி பண்டார மற்றும் அத்தபத்து முதியான்சலாகே அநுர விஜேசுந்தர என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, *1990* ஆம் ஆண்டின் *4* ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் *1990* ஆம் ஆண்டின் *4* ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் *13* ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட *1794* ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதான பாதையுரிமையையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பதினொரு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. *11,83,346.46*) கொண்ட தொகையை *2009,* திசெம்பர் *1* ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை எட்டு இலட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று ஐம்பத்து நான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. *8,10,754.57*) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (*29%*) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக *1794* ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும்

வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 1794 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள தேவமெதி ஹறத்பத்துவின் வல்கம்பத்து கோறளையிலுள்ள கெலிமுனையில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. பி. திசாநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.10.30 ஆந் திகதிய 4984 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 01 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் அம்பலான்பிட்டியஹேன மறுபெயர் பொரலுவெலஹேன எனவழைக்கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 01, சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது - வடக்கில் : 1503 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 03 மற்றும் 01 அத்துடன் புத்தளம் - குருநாகல் பிரதான வீதி; கிழக்கில்: புத்தளம்-குருநாகல் பிரதான வீதி மற்றும் காணித்துண்டம் 2 ; தெற்கில் காணித்துண்டம் 02 மற்றும் 3226 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 01 இன் மீதிப்பாகம் அத்துடன் ; மேற்கில் : 3226 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 01 இன் மீதிப்பாகமும் புஞ்சிராலவினதும் ஏனையோரினதும் காணியும்; பரப்பளவில் இது, அதன்மீதுள்ளவையும் அவற்றோடிணைந்துள்ளவையுமான கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ஒரு ஏக்கர் மூன்று றூட்கள் (1ஏ. 3றூ. 0பே.) கொண்டுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

1-50

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 411310 – சுதத் புஸ்பகுமார ஈஸ்வரா

23.12.2009 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

''கடன் எடுத்த சுதத் புஸ்பகுமார ஈஸ்வரா என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக மாத்தறை பிரசித்த நொத்தாரிசு பி. ஜி. சி. நானாயக்கார 1.12.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 9785 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் 20.04.2009 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ரூபா 8,43,815.75 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்படி முறி இலக்கம் 9785 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான 8,43,815.75 ரூபாவுடன் 21.04.2009 திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 7,31,250 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சதவட்டியுடனும் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.''

#### அட்டவணை

1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோரளையில் வெலிகம பிரதேச சபை எல்லையில் தெணிபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். சமரசிங்க 29.07.2004 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1576 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 இல் லொட் 2 மற்றும் 3 கமஅச்சிகே தேவாலவத்த மற்றும் லொட் 1 தெவல் ஒகண்தவத்த காணியின் பகுதிபடுத்திய லொட் 5 காணியின் எல்லைகள் - வடகிழக்கு : வரைபடம் இலக்கம் 1576 லொட் 4 மற்றும் 3; தென்கிழக்கு : 15 அடி ரோட் வரைபடம் இலக்கம் 1576 இல் லொட் 14; தென்மேற்கு : வரைபடம் இலக்கம் 1576 இல் லொட் 6 ; வடமேற்கு: இக்காணியின் லொட் 1. இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 10.7பே.) மற்றும் இக்காணிக்கு உள்ள பாதை பாவிக்கும் உரிமையுடன் இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் D 994/270 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி தெணிபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். சமரசிங்க 29.07.2004 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1576 இல் காண்பிக்கப்பட்ட கமஅச்சிகே தேவாலவத்த லொட் 1 மற்றும் லொட் 1 தெவல் ஒக்கண்தவத்த காணியின் லொட் 2 மற்றும் 3 காணிகளின் பகுதிபடுத்திய காணித் துண்டான லொட் 6 காணியின் எல்லைகள் - வடகிழக்கு : வரைபடம் இலக்கம் 1576 லொட் 5 ; தென்கிழக்கு : 15 அடி ரோட் லொட் 14 வரைபடம் இலக்கம் 1576 படி ; தென்மேற்கு : வரைபடம் இலக்கம் 1576 படி லொட் 7 ; வடமேற்கு : இக்காணியின் லொட் 1 லொட் இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 15பே.) இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் D 994/271 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி தெணிபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். சமரசிங்க 29.07.2004 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1576 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2 மற்றும் 3 உம், கமஅச்சிகே தேவாலவத்த லொட் 1 மற்றும் லொட் 1 தெவல் ஒக்கண்தவத்த காணியின் லொட் 7 எல்லைகள் - வடகிழக்கு : வரைபடம் இலக்கம் 1576 லொட் 6 ; தென்கிழக்கு : வரைபடம் இலக்கம் 1576 லொட் 14-15 அடி ரோட் ; தென்மேற்கு : வரைபடம் இலக்கம் 1576 லொட் 14 மற்றும் லொட் 8 ; வடமேற்கு : இக்காணியின் லொட் 1. விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 12.9பே.) மற்றும் வரைபடம் இலக்கம் 1576 இல் காண்பிக்கப்பட்ட பாதைக்கான லொட் 14 பாவிக்கும் உரிமையுடன் இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் D 994/272 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. மேற்படி தெணிபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள லொட் 2 மற்றும் 3 என்ற காணிகள் ஒன்றாக்கப்பட்ட கம்அச்சிகே தேவாலவத்த லொட் 1 மற்றும் லொட் 1 தெவல் ஒக்கண்தவத்த காணியின்

நிலஅளவையாளர் எஸ். சமரசிங்க 29.07.2004 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1576 இல் காண்பிக்கப்பட்ட லொட் 8 காணியின் எல்லைகள் - வடகிழக்கு : வரைபடம் இலக்கம் 1576 லொட் 17, 15 அடி ரோட் மற்றும் வரைபடம் இலக்கம் 1576 இல் லொட் 14 ; தென்கிழக்கு: வரைபடம் இலக்கம் 1576 லொட் 14 மற்றும் லொட் 9 ; தென்மேற்கு : பொல்வத்து ஆறு ; வடமேற்கு : இக்காணியின் லொட் 1 விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 14.7பே.) மற்றும் வரைபடம் இலக்கம் 1576 இல் 15 அடி ரோட் பாவிக்கும் உரிமையுடன் இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் D 994/273 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. தெணிபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். சமரசிங்க 29.07.2004 ஆந் திகதி வரையப்பட்ட வரைபடம் இலக்கம் 1576 இல் காண்பிக்கப்பட்ட ஒன்றாக்கப்பட்ட லொட் 2 மற்றும் 3 காணிகளின் லொட் 1 கமஅச்சிகே தேவாலவத்த மற்றும் தெவல் ஒக்கண்தவத்த காணிகளில் பகுதிபடுத்திய காணி துண்டான லொட் 9 எல்லைகள் - வடகிழக்கு : லொட் 10 வரைபடம் இலக்கம் 157 6 இல் லொட் 14 - 15 அடி ரோட் ; தென்கிழக்கு : இக்காணியின் ஒரு பகுதி ; வடமேற்கு : வரைபடம் இலக்கம் 1576 லொட் 8 மற்றும் 15 அடி ரோட்; தென்மேற்கு : பொல்லவத்த ஆறு. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 13.7பே.) இக்காணியின் பாதைக்கு ஒதுக்கப்பட்ட வரைபடம் இலக்கம் 1576 இல் லொட் 14. இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் D 994/274 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

6. மேற்படி தெணிபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். சமரசிங்க 29.07.2004 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1576 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2 மற்றும் 3 ஒன்றாக்கப்பட்ட கமஅச்சிகே தேவாலவத்த லொட் 1 மற்றும் தெபல ஒக்கன்தவத்த லொட் 1 காணிகளின் பகுதிபடுத்திய காணி துண்டான லொட் 10 எல்லைகள் - வடகிழக்கு : வரைபடம் இலக்கம் 1576 லொட் 11 ; தென்கிழக்கு : இக்காணியின் ஒரு பகுதி ; ; தென்மேற்கு : லொட் 9 - 15 அடி ரோட் மற்றும் லொட் 14 வரைபடம் 1576 படி ; வடமேற்கு : 15 அடி ரோட் வரைபடம் இலக்கம் 1576. லொட் 14 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 11.9பே.) மற்றும் வரைபடம் இலக்கம் 1576 இல் லொட் 14 அடி பாதை பாவிக்கும் உரிமையுடன் இந்தக் காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் D 994/ 275 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

1-97

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 339951, 447923 - மொகமட் அஸ்ரப் மொகமட் அஸ்வர்

26.05.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த மொகமட் அஸ்ரப் மொகமட் அஸ்வர் என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எல். ஜயவீரவின் 30.11.2004 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1823 மூலம் கொமர்ஷல் பேங்க் சிலோன் பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பேங்க் சிலோன் பீஎல்சீக்கு 14.10.2009 ஆந் திகதி வரை ரூபா 21,88,856.62 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி படி மேற்படி முறி இலக்கம் 1823 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 21,88,856.62 வுடன் 15.10.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 16,34,413.43 க்கு மேலதிக வட்டியில் ஆண்டொன்றுக்கு 22% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப் பட்டது."

### அட்டவணை

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம், ராகம் பத்து அலுத்குரு கோரளையில் வத்தளை மாபேல நகர சபை எல்லையில் மாபோல கிராமத்தில் துவவத்த ரோட் கட்டிடம் இலக்கம் 61 அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க 5.3.1983 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 864 இல் காண்பிக்கப்பட்ட தவட்டகாகும்புர காணியின் லொட் C1 எல்லைகள் - வடக்கு : வரைபடம் இலக்கம் 651 இல் லொட் B ; கிழக்கு : தூவ ரோட் ; தெற்கு : வரைபடம் இலக்கம் 781 இல் லொட் C2 ; மேற்கு : இக்காணி ஒரு பகுதி (வயல் நிலம்) ; மேற்படி வரைபடம் இலக்கம் 864 படி இக்காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் B 736/56 இல் பதிவுசெய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

1-98

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

கொழும்பு 14, பராக்கிரம ரோட், இல. 104 ஐச் சேர்ந்த திருவாளர்கள் சீனியா டிரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கடன் பொறுப்புகளுக் காக கொழும்பு 05, ஹவ்லொக் டவுன், தி பொன்சேகா பிளேஸ், இல. 28A மற்றும் கொழும்பு 08, கிங்ஸி ரோட்,இல. 149 இல் ஈடுவைத்த ஆதனங்கள்

2010.09.23 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப் பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது —

1.0.

1.1 கடன்வசதி 1

ரூபா 25.5 மில்லியனுக்கு பிரசித்த நொத்தாரிசு ஜே. சி. மஹஆரச்சி அத்தாட்சிப்படுத்திய 2009.10.08 ஆந் திகதியிட்ட ஈட்டு

முறி இல. 11 மற்றும் பிரசித்த நொத்தாரிசு தம்மிக கித்துல்கொட அத்தாட்சிப்படுத்திய ரூபா 30.0 மில்லியனுக்கு 2003.06.05 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1497 ஆகியவற்றின் பேரில் இல. 104, பராக்கிரம ரோட், கொழும்பு 14 எனும் முகவரியைச் சேர்ந்த சீனியா டிரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து ரூபா 26.0 மில்லியன் மீள் அட்டவணைக் கடன் A மீது 2010.08.31 வரை தீர்க்காதிருக்கும் முதலும் வட்டியும் மூன்று கோடி எழுபத்தெட்டு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று எண்பத்தைந்து ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூ. 3,78,16,285.95) அத்துடன் இரண்டு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து நாற்பது ரூபா தொண்ணூற்று நான்கு சதங்கள் (ரூ. 2,58,69,040.94) மீது ஆண்டுக்கு 20% வீதத்தில் 2010.09.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

1.2 கடன்வசதி 2

ரூபா 25.5 மில்லியனுக்கு பிரசித்த நொத்தாரிசு ஜே. சி. மஹஆரச்சி அத்தாட்சிப்படுத்திய 2009.10.08 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 11 மற்றும் ரூபா 30.0 மில்லியனுக்கு பிரசித்த நொத்தாரிசு தம்மிக கித்துல்கொட அத்தாட்சிப்படுத்திய 2003.06.05 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1497 ஆகியவற்றின் பேரில் மீள் அட்டவணைக் கடன் B ரூபா 22.0 மில்லியன் மீது 2010.08.31 ஆந் திகதி வரை தீர்க்காதிருக்கும் முதலும் வட்டியும் இல. 104, பராக்கிரம ரோட், கொழும்பு 14 எனும் முகவரியைச் சேர்ந்த சீனியா டிரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து இரண்டு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து எண்பத்தோராயிரத்து நூற்று முப்பது ரூபா பதினெட்டு சதம் (ரூ. 2,34,81,130.18) அத்துடன் இரண்டு கோடியே பதினேழு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து ஐநூற்று அறுபத்தொன்பது ரூபா பதினொரு சதங்கள் (ரூ. 2,17,41,569.11) மீது ஆண்டுக்கு 6% வீதத்தில் 2010.09.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

20.

2.1

மேற்குறிப்பிட்ட முறி இலக்கங்கள் 1497 மற்றும் 11 ஆகியவற்றின் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட மூன்று கோடி எழுபத்தெட்டு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று எண்பத்தைந்து ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூ. 3,78,16,285.95) அத்துடன் 2010.09.01 தொடக்கம் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும்,

2.2

மேற்குறிப்பிட்ட முறி இலக்கங்கள் 1497 மற்றும் 11 ஆகியவற்றின் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து எண்பத்தோராயிரத்து நூற்று முப்பது ரூபா பதினெட்டு சதம் (ரூ. 2,34,81,130.18) அத்துடன் 2010.09.01 தொடக்கம் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும்,

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 290, ஹவ்லொக் ரோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட முன்னோடி பட்டய ஏலதாரர் சொக்மன் அன்ட் சமரவிக்கிரமவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங்களுக்குமிணங்க மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தொடர்பாடல் முகாமையாளர் (அறவிடல் தொகுதிக்கும்) இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளின் கறுவாத்தோட்டம் வட்டாரத்தில் டட்லி சேனாநாயக்க மாவத்தையில் (தற்சமயம் வரிமதிப்பிலக்கம் 149, கிங்ஸி ரோட்) அமைந்த வரிமதிப்பிலக்கம் 2 ஐக் கொண்ட நிலமனையின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளரும் மட்டுப்படுத்துபவரும் கே. பீ. விஜேவீர தயாரித்த 1992, யுன் 27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 639 இல் விபரித்த துண்டு 1Cஎன அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித் துண்டு வடக்கில் : துண்டுகள் 1A மற்றும் 1B உம் ; கிழக்கில் : டட்லி சேனாநாயக்கா மாவத்தை, வரிமதிப்பிலக்கம் 6 ஐக் கொண்ட நிலமனை யும்; தெற்கில் : துண்டு 1D உம் ; மேற்கில் : கிங்ஸி ரோட்டும் எல்லை களாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 639 இன்படி பன்னி ரண்டு தசம் ஒன்று சைபர் (0ஏ. 0றூ. 12.10பே.) அல்லது சைபர் தசம் சைபர் மூன்று சைபர் ஆறு ஹெக்டேயர் (0.0306 ஹெக்.) விஸ்தீரண முடையது. இது கொழும்பு காணிப் பதிவகத்தில் A849/226 இல் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்றுவில் கொழும்பு மாநகரசபை எல்லைகளுக்குள் தி. பொன்சேகா பிளேஸ் நெடுகவும் அமைந்த ஹவ்லொக்டவுன், தி பொன்சேகா பிளேஸ், வரிமதிப்பிலக்கம் 28A ஐக் கொண்ட "த கிளேட்ஸ்" என யாவரும் அறிந்த நிலமனை மற்றும் ஆதனத்திலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். ரி. பி. சேனாதீர தயாரித்த 1976, ஒற்றோபர் 6 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 947 இல் விபரித்த துண்டு N2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: தி பொன்சேகா பிளேசும் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு N5 உம் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு N3 உம் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 947 இல் துண்டு N1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 947 இன்படி பதினாறு தசம் மூன்று சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 16.30பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் வளர்பவையும் ஆகும். இது கொழும்பு காணிப் பதிவகத்தில் A938/248 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட துண்டு N2 மிகவும் அண்மைய அளவை வரைபடத்தின் படி பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை நிர்வாக எல்லைகளுள் ஹவ்லொக்டவுன், வட்டாரம் இல. 42 இல் ஒன்பது தசம் ஒன்று ஐந்து மீற்றர் (30 அடிகள்) அகலமுடைய ரோட், மற்றும் தி பொன்சேகா பிளேஸில் அமைந்ததும், தி பொன்சேகா பிளேஸ், வரிமதிப்பிலக்கம் 28A ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி தயாரித்த 1977, செத்தெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்ட அளவையாளர் வரைபடம் இல. 6138 இல் துண்டு N2 அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : தி பொன்சேகா ரோட்டும் ; கிழக்கில் : ஒன்பது தசம் ஒன்று ஐந்து மீற்றர் (30 அடிகள்) அகல ரோட்டும் ; தெற்கல் : தி பொன்சேகா ரோட், வரிமதிப்பிலக்கம் 28/11 ஐக் கொண்ட மேற்குறிப்பிட்ட இல. 947 இல் துண்டு N3 உம் ; மேற்கில் : தி பொன்சேகா பிளேஸ், வரிமதிப்பிலக்கம் 28 ஐக் கொண்ட மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 947 இல் துண்டு N1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6138 இன்படி பதினாறு தசம் மூன்று சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 16.30பே.) அல்லது ஹெக்டயர்கள் சைபர் தசம் நான்கு ஒன்று இரண்டு மூன்று (0.4123 ஹெக்.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் வளர்பவையும் ஆகும்.

### மூன்றாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட தி பொன்சேகா பிளேஸில் அமைந்த "தி கிளேட்ஸ்" என அழைக்கப்படும் காணியிலிருந்து மேற்குறிப்பிட்ட வரைபடம்இல. 947 இல் விபரித்த துண்டு N5 (90 அடி அகலப்பாதைக்கு ஒதுக்கிய) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : தி பொன்சேகா பிளேசும் ; கிழக்கில் : 20 அடி அகல தனியார் பாதையும்; தெற்கில் : தனியார் பாதையும் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 947 இல் துண்டுகள் N2, N3 மற்றும் N4 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 947 இன்படி ஏழு தசம் எட்டு சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7.80பே.) விஸ்தீரணமுடையது. இது கொழும்பு காணிப் பதிவகத்தில A 901/257 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட தி பொன்சேகா பிளேஸில் அமைந்த "தி கிளேட்ஸ்" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். ரி. பீ. சேனாதீர தயாரித்த 1974, சனவரி 26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 731A இல் விபரித்த துண்டு H (பாதைக்கு ஒதுக்கப்பட்ட) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : தி பொன்சேகா பிளேசும் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 731A இல் துண்டுகள் A, B மற்றும் C உம் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 731A இல் துண்டு J உம் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 731A இன் படி துண்டுகள் G மற்றும் I உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 731A இல் படி, பதினைந்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.50பே.) விஸ்தீரணமுடையது. இது கொழும்பு காணிப் பதிவகத்தில A 740/286 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

எச். எம். திலக்கரத்னபண்டா,
தொடர்பாடல் முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அறவிடல் தொகுதிப் பிரிவு,
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.
2010, செத்தெம்பர் 28.

1-129

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0408700076

கடனாளியின் முழுப் பெயர் : சத்துருசிங்ஹ அலங்காரகே சமிலா தில்ஹானி

"கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. திசாநாயக்க என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 510 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2008.03.01 ஆந் திகதியிடப்பட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தல்) சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவித்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் இரண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து ஐநூற்று ஐந்து ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 2,38,505.41) 2010.01.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால் -

1. குறிப்பிட்ட கடன்தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான இரண்டு இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று ஆறு ரூபா அறுபத்தெட்டு சதத்தினையும் (ரூபா 2,10,506.68) அதற்கான 2010.01.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக இருபத்தேழாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று எட்டு ரூபா எழுபத்துமூன்று சதத்தினையும் (ரூபா 27,998.73) மொத்தமாக இரண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து ஐநூற்று ஐந்து ரூபா நாற்பத்தொரு சதத்தினை (ரூ. 2,38,505.41) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட இரண்டு இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று ஆறு ரூபா அறுபத்தெட்டு சதத்துக்காக (ரூபா 2,10,506.68) அறவீடு செய்யவேண்டிய 26 வீதமான வருடாந்த வட்டியாக 2010.02.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்வதற்கும்;

3. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்ய வேண்டிய பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்துகொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்படிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு).

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

